4

# தீர்க்கதரிசனப் புத்தகங்கள்

*தொடங்குவதற்கு: ப. ஏ. தீர்க்கதரிசனப் புத்தகங்களில், தகவல்கள் மற்றும் சூழ்நிலைகளின் பரந்த எல்லையளவுடன் கூடிய பதினேழு புத்தகங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. எந்தத் தீர்க்கதரிசி எப்போது மற்றும் யாருக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தார் என்பதைக் காட்டுவதற்கு வரைபடங்கள் உள்ளன. சுருக்கமான தொகுப்புரைகள், நாம் விளக்கம் அளிக்க முயற்சி செய்யும் தீர்க்கதரிசனம் புத்தகங்களுக்கு ஒரு பின்னணித் திரையைத் தருகின்றன. ஒரு செய்தியைத் தேவன் தீர்க்கதரிசி மூலமாக கொடுத்தது ஏன் என்பதை அறிதலானது ஒரு வசனப் பகுதியைப் புரிந்துகொள்வதற்கான திறவுகோலாக உள்ளது.*

## ஒரு அறிமுகம்

ஆங்கில மற்றும் தமிழ் பழைய ஏற்பாட்டில், ஏசாயாவின் தீர்க்கதரிசனம் முதல் மல்கியாவின் தீர்க்கதரிசனம் வரையிலான புத்தகங்கள், தீர்க்கதரிசனப் புத்தகங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. வேதவசனங்களின் இந்தப் பகுதி, "பெரிய தீர்க்கதரிசனங்களின்" (ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல் மற்றும் தானியேல் என்ற) ஐந்து புத்தகங்களையும் "சிறிய தீர்க்கதரிசனங்கள்" என்று அழைக்கப்படும் (ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா மற்றும் மல்கியா என்ற) பன்னிரெண்டு புத்தகங்களையும் உள்ளடக்குகிறது. "பெரிய" மற்றும் "சிறிய" என்ற பிரிவினையானது இந்தப் புத்தகங்களின் செய்திகளை வைத்து அல்ல, ஆனால் இவற்றின் அளவை வைத்தே ஏற்படுத்தப் பட்டுள்ளது; "பெரிய தீர்க்கதரிசனங்களின்" எழுத்துக்கள் "சிறிய தீர்க்கதரிசனங்களின்" எழுத்துக்களை விட நீளமானவைகளாக உள்ளன.[1]

#### தீர்க்கதரிசிகளின் ஊழியம்

இந்தப் புத்தகங்களைப் புரிந்துகொள்வதற்கு நாம், தீர்க்கதரிசிகளின் பணிப்பொறுப்பைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாக உள்ளது. தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டின் காலம் முழுவதிலும் இஸ்ரவேல் நாட்டில் செயல் துடிப்பு உள்ளவர்களாக இருந்தனர். வரலாற்றுப் புத்தகங்களில், பல்வேறு தீர்க்கதரிசிகளின் ஊழியம் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] தீர்க்கதரிசிகளை அடையாளப்படுத்தப் பல்வேறு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன: "தீர்க்கதரிசி" (1 சாமுவேல் 3:20), "ஞானதிஷ்டிக்காரன்" (1 சாமுவேல் 9:9), "தேவனுடைய மனுஷன்" (1 சாமுவேல் 2:27) மற்றும் "காவலாளன்" (எசேக்கியேல் 3:17). சிலவேளைகளில் தேவன் "என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகள்" என்று குறிப்பிட்டார் (2 இராஜாக்கள் 17:13; எரேமியா 26:5, 19; எசேக்கியேல் 38:17; சகரியா 1:6). தேவனிடத்தில் இருந்து செய்தியைப் பெற்று, பின்பு அவருக்காக

மக்களிடம் பேசுதல்தான் தீர்க்கதரிசிகளின் பணிப்பொறுப்பாக இருந்தது என்பதை இந்த விவரிப்புச் சொற்றொடர்கள் குறிப்பிடுகின்றன. தேவனுடைய பிரதிநிதிகளாகவும் அவருக்காகப் பேசுபவர்களாகவும் இருக்கும்படிக்கு, தீர்க்கதரிசிகள் விசேஷித்த வகையில் தேவனால் அழைக்கப்பட்டு இருந்தனர்.[3] செல்விளைவில் ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய "வாயாக" - தேவன் தமது மக்களுக்குத் தமது செய்தியைக் கொடுப்பதற்கு, அவர் பயன்படுத்திய கருவியாக - இருந்தார் (காண்க யாத்திராகமம் 4:16; 7:1, 2).

ஆகவே, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் எப்போதுமே எதிர்கால நிகழ்வுகளை முன்னுரைத்தது என்றோ அல்லது தீர்க்கதரிசி என்பவர் முதன்மையாக எதிர்காலத்தில் நடப்பவற்றை முன்னுரைப்பவராக இருந்தார் என்றோ நினைப்பது தவறானதாக உள்ளது. அதற்குப் பதிலாக, தீர்க்கதரிசி என்பவர் ஒரு "ஒளிவுமறைவற்று கூறுபவராக," தேவனுடைய வார்த்தையை மறைவின்றிப் பேசுபவராக இருந்தார். அவர் மக்களுக்குத் தேவனுடைய வார்த்தையை அளித்தார்; அவர் தமது நாட்களில் ஒரு பிரசங்கியாராக இருந்தார். அவர் முதலாவதாகவும் முக்கியமாகவும், தமது சொந்த நாட்களுக்கு ஒரு செய்தியைக் கொண்டிருந்தார்.

தீர்க்கதரிசிகள் வழக்கமாகத் தேவனுடைய மக்களுக்கு அவர்களின் உடனடி சூழ்நிலைகளைப் பற்றிப் பேசினர். இருப்பினும், தேவனுடைய வசனத்தை அவர்கள் அறிவித்தது, கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் விளைவுகளை அறிவித்தது என்ற கருத்தில், தீர்க்கதரிசிகள் எதிர் காலத்தையும் முன்னுரைத்தனர். சில வேளைகளில் அவர்கள், தொலைதூர எதிர்காலத்தில் நடக்க இருந்த நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்களையும் கூடக் கொடுத்தனர். எடுத்துக் காட்டாகப் புதிய ஏற்பாட்டில் இருந்து நாம், மேசியாவைப் பற்றியும் அவரது இராஜ்யத்தைப் பற்றியும் தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ளன என்பதை அறிகிறோம்.

தீர்க்கதரிசிகள் முதன்மையாக இஸ்ரவேல் மக்களுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தனர், இருப்பினும் அவர்களின் புத்தகங்களில் மற்ற நாடுகளைப் பற்றிய செய்திகளும் அடங்கியிருந்தன. அவர்கள் தேவனுடைய மக்களுக்கு அவருடைய செய்தியாளர்களாக இருந்ததால், முழுமையாக தேசம் என்ற வகையில் அவர்கள் மீது அவர் கொண்டிருந்த அக்கறை பற்றி அவர்கள் அடிக்கடி பேசினர். இதன் விளைவாக அவர்கள், அடிக்கடி நாட்டின் விஷயங்களில் ஈடுபட்டு, இராஜாக்களுக்கு ஆலோசனை கூறினர் மற்றும் அவர்களைக் கடிந்து கொண்டனர்.

இஸ்ரவேல் நாட்டில், மற்ற தேவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தீர்க்கதரிசிகளும் கர்த்தருக்காகப் பேசுவதாக நேர்மையற்ற முறையில் உரிமை கோரிய தீர்க்கதரிசிகளுமான, கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்பினர்.[4] கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பின்வருமாறு அடையாளம் காண முடிந்திருந்தது:

1. ஒரு கள்ளத்தீர்க்கதரிசியின் செய்தியானது, அவரது உரையைக் கேட்பவர்கள் எதை விரும்பினரோ அவ்வகையானதாக இருந்தது. இதுவே மிகாயா மற்றும் ஆகாப் அரசர் யுத்தத்தில் மரிப்பதற்கு முன்னர் (1 இராஜாக்கள் 22:6-28அ) அவருக்கு முன் நின்று பேசிய நானூறு கள்ளத் தீர்க்கதரிசிகள் ஆகியோருக்கு இடையிலான வேறுபாடாக இருந்தது.

2. கள்ளத்தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனங்கள் அல்லது "அடையாளங்கள்"

*உண்மையானதாக இருக்கவில்லை (உபாகமம் 18:18-22; காண்க யாத்திராகமம் 4:8).*

*3. சில வேளைகளில், ஒரு கள்ளத்தீர்க்கதரிசியின் செய்தி, புறதெய்வம் ஒன்றின் பெயரால் பேசப்பட்டது. அவரது அடையாளம் நடந்தேறும் பட்சத்தில், அவரது செய்தியானது, தேவனால் முன்பே வெளிப்படுத்தப்பட்டிருந்த செய்தியுடன் நேர்மாறானதாக இருந்தது என்றால், அவர் ஒரு கள்ளத் தீர்க்கதரிசியாக இருந்தார். (காண்க உபாகமம் 13:1-3.)*

***தீர்க்கதரிசிகளின் செய்தி***

*தீர்க்கதரிசிகளின் முற்றிலுமான ஐந்து பிரதான ஆய்வுக்கருத்துக்கள் அடையாளப்படுத்தப்பட முடியும்: (1) வரலாறு முழுவதிலும் கர்த்தரே ஆட்சியாளாராக இருக்கிறார், (2) கர்த்தருடன் நேராக இருத்தல் என்பது முதன்மையான தேவையாக உள்ளது, (3) மதம் மற்றும் சமூகத்தின் ஒழுக்கரீதியான அஸ்திபாரம், (4) நியாயத்தீர்ப்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் கலவை மற்றும் (5) மேசியாவின் இராஜ்யம்.[5] தீர்க்கதரிசிகளால் முன்வைக்கப்பட்ட முற்றான செய்தியின் அதிக விபரமான வரைகுறிப்பு கீழே தரப்படுகிறது:*

I. *"எனது செய்தி கர்த்தரிடத்தில் இருந்து வருகிறது." (காண்க ஏசாயா 1:10; எரேமியா 1:9; எசேக்கியேல் 13:1; ஆமோஸ் 7:14-16; செப்பனியா 1:1.)*

II. *" 'அழிவு வரும்' என்று கர்த்தர் சொல்லுகிறார்."*
   A. *பல அல்லது பெரும்பான்மையான தீர்க்கதரிசிகளால் இந்த உண்மை சுட்டிக்காண்பிக்கப்பட்டது. (காண்க எரேமியா 7:15; ஓசியா 1:4; ஆமோஸ் 7:11.)*
   B. *வரவிருந்த அழிவு சிலவேளைகளில், "கர்த்தருடைய நாள்" என்ற வகையில் பேசப்பட்டது. (காண்க ஏசாயா 13:6, 9; எரேமியா 46:10; செப்பனியா 1:14-16.)*
   C. *பாவத்தின் (விசேஷமாக, சமூக அநீதி மற்றும் விக்கிரகாராதனை என்ற பாவங்களின்) காரணமாக அழிவு வர இருந்தது. (காண்க-எரேமியா 7:9; ஓசியா 4:1-19; மீகா 1:3-5; 2:1, 2.)*
   D. *அழிவிற்கான ஆதாரமூலமாக மற்ற நாடுகள் இருக்கும் என்றாலும், தேவன் தமது மக்களைத் தண்டிக்க அந்த நாடுகளைத் தமது கருவிகளாகப் பயன்படுத்தினார். (காண்க எரேமியா 27:5, 6.)*
   E. *தேவன் நாட்டை தண்டிக்கும்போது, தனி நபர்கள் தங்கள் சொந்தப் பாவங்களுக்கு மாத்திரமே கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாய் இருந்தனர். (காண்க எசேக்கியேல் 18:20.)*
   F. *இஸ்ரவேல் நாட்டின் சிலாக்கியமான நிலையானது, கீழ்ப்படியாத மக்களை அழிவில் இருந்து பாதுகாக்காது. (காண்க எரேமியா 7:4.)*

III. *" 'மனந்திரும்பி நீதியாக வாழுங்கள்' என்று கர்த்தர் உரைக்கிறார்."*
   A. *மனந்திரும்புதல் அத்தியாவசியமாக இருந்தது. (காண்க ஏசாயா 1:16-20; எரேமியா 26:13; யோவேல் 2:12-14; ஆமோஸ் 5:4-7; யோனா; செப்பனியா 2:3.)*

B. வெறும் சடங்காச்சாரமான வாழ்வு அல்ல, ஆனால் நீதியின்படி வாழுதல் கேட்டுக் கொள்ளப்பட்டது. *(காண்க ஏசாயா 1:13; ஆமோஸ் 4: 1-5; 5:21-24; மீகா 6:6-8; சகரியா 7:8-10).*

IV. *" 'எதிர்காலம் பற்றிய நம்பிக்கை உள்ளது' என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

A. *எஞ்சியவர்கள் மீட்கப்படுவார்கள். (காண்க ஆமோஸ் 3:12; மீகா 2:12; 4:6, 7; செப்பனியா 3:12, 13.)*

B. *மக்கள் அடிமைத்தளையில் இருந்து திரும்பும்போது இஸ்ரவேல் நாட்டிற்கு ஆசீர்வாதங்கள் காத்திருந்தன. (காண்க ஓசியா 14:4-7; யோவேல் 3:17; ஆமோஸ் 9:14, 15; மீகா 7:18-20.)*

V. *தீர்க்கதரிசிகள் மேசியாவின் யுகத்தைப் பற்றியும் பேசினர். (காண்க ஏசாயா 2:2-4; 53; ஏரேமியா 31:31-34; யோவேல் 2:28-32; ஆமோஸ் 9:11, 12; மீகா 4:1-56.)*

VI. *தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த மக்களுக்கே அடிக்கடி செய்திகளைக் கொண்டிருந்தனர். (காண்க ஆகாய் 1:8; சகரியா 1:16; மல்கியா 3:10.)*

VII. *தீர்க்கதரிசிகள் மற்ற நாடுகளைப் பொறுத்த மட்டிலும் செய்திகளைக் கொண்டிருந்தனர். (காண்க ஏசாயா 13-23; எரேமியா 46-51; எசேக்கியேல் 25-32; ஒபதியா; நாகூம்; ஆமோஸ் 1; 2; யோனா.)*

## அவர்கள் எப்போது தீர்க்கதரிசனம் உரைத்தனர் ?[7]

### கி.மு. எட்டாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசிகள்

| | |
|---|---|
| *யோவேல்* | *கி.மு. 800(?)*[8] |
| *யோனா* | *கி.மு. 780* |
| *ஓசியா* | *கி.மு. 745* |
| *ஆமோஸ்* | *கி.மு. 760* |
| *ஏசாயா* | *கி.மு. 740-680* |
| *மீகா* | *கி.மு. 735* |

### கி.மு. ஏழாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசிகள்

| | |
|---|---|
| *நாகூம்* | *கி.மு. 625-612* |
| *செப்பனியா* | *கி.மு. 630-622* |
| *எரேமியா* | *கி.மு. 627-584* |
| *ஆபகூக்* | *கி.மு. 608* |

## நாடுகடத்தப்பட்ட வேளையில் இருந்த தீர்க்கதரிசிகள்

| | |
|---|---|
| தானியேல் | கி.மு. 605-530 |
| எசேக்கியேல் | கி.மு. 593-570 |
| ஒபதியா | கி.மு. 586/585[9] |

## நாடுகடத்தப்பட்ட நிலைக்குப் பின்பு இருந்த தீர்க்கதரிசிகள்

| | |
|---|---|
| ஆகாய் | கி.மு. 520 |
| சகரியா | கி.மு. 520-518 |
| மல்கியா | கி.மு. 435 |

## அவர்கள் யாருக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தனர்?

| *வரலாற்றின் காலகட்டம்* | *தீர்க்கதரிசி* | *யாருக்கு?* |
|---|---|---|
| இராஜ்யம் பிரிவுபட்டிருந்த காலம் | யோவேல் | யூதா |
| | யோனா | |
| | ஓசியா | இஸ்ரவேல் |
| | ஆமோ | இரண்டிற்கும் |
| | ஏசாயா | யூதா |
| | மீகா | இரண்டிற்கும் |
| யூதாவின் காலம் மாத்திரம் | நாகூம் | |
| | செப்பனியா | யூதா |
| | எரேமியா | யூதா |
| | ஆபகூக் | யூதா |
| நாடுகடத்தப்பட்ட காலம் | தானியேல் | |
| | எசேக்கியேல் | |
| | ஒபதியா (புலம்பல்) | |
| மீளக்கட்டுவித்தலின் காலம் (நாடுகடத்தப்பட்ட நிகழ்வுக்குப் பிந்திய காலம்) | ஆகாய் | |
| | சகரியா | |
| | மல்கியா | |

## தீர்க்கதரிசனப் புத்தகங்களின் சுருக்கத் தொகுப்புரைகள்

### பெரிய தீர்க்கதரிசனங்கள்

பெரிய தீர்க்கதரிசனப் புத்தகங்கள் ஒவ்வொன்றிற்கும் சுருக்கமான அறிமுகம் பின்தொடருகிறது:

*ஏசாயா, மேசியாத்துவத் தீர்க்கதரிசி.* “யெகோவாவின் இரட்சிப்பு” என்ற அர்த்தம் கொண்ட பெயருடைய ஏசாயா தீர்க்கதரிசி, யூதாவின் நான்கு இராஜாக்களின் ஆட்சிகாலங்களின் போது எருசலேமில்

தீர்க்கதரிசனம் உரைத்தார்: உசியா (கி.மு. 783-742), யோதாம் (கி.மு. 742-735), ஆகாஸ் (கி.மு. 735-715), எசேக்கியா (கி.மு. 715-687). அவர் மனாசே இராஜாவின் ஆட்சிக்காலத்தின் போது (கி.மு. 697-642) மரித்தார் என்று நினைக்கப்பட்டது. அவர் ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் காலம் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கலாம். அவர் யூதாவின் அரசர்களோடு, விசேஷமாக, ஆகாஸ் (ஏசாயா 7) மற்றும் எசேக்கியா (ஏசாயா 36; 37) ஆகியோரோடு நெருக்கமான இணைவு கொண்டிருந்தார். அவரது புத்தகம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட முடியும்: ஏசாயா 1-39 அதிகாரங்கள் (யூதாவுக்கும் மற்ற நாடுகளுக்கும்) ஒரு எச்சரிக்கையாக இருக்கையில், ஏசாயா 40-66 அதிகாரங்கள் தேவனுடைய மக்களுக்கு ஆறுதல் அளிக்கிறது. தீர்க்கதரிசனப் புத்தகங்கள் வேறு எதைக் காட்டிலும் அதிகமாக இதில், மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் அடங்கி உள்ளன. (விசேஷமாக ஏசாயா 53ஐக் காணவும்.)

*எரேமியா, அழும் தீர்க்கதரிசி.* ஆனதோத் ஊரின் ஆசாரியர்களில் ஒருவரான இலக்கியாவின் மகன் எரேமியா, கி.மு. 627 முதல் 587 வரையில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக, யூதாவின் கடைசி ஐந்து அரசர்களின் ஆட்சிக்காலங்களின் போது தீர்க்கதரிசனம் உரைத்தார்: யோசியா (கி.மு. 640-609). யோவகாஸ் (கி.மு. 609), யோயாக்கீம் (கி.மு. 609-598), யோயாக்கீன் (கி.மு. 598) மற்றும் சிதேக்கியா (கி.மு. 598-587). அவர் தமது மக்கள் பாபிலோனால் அச்சுறுத்தப்பட்டு, தாக்கப்பட்டு, அழிக்கப்பட்ட போது அவர்களுக்கு ஊழியம் செய்தார். பாபிலோனால் யூதா கடைசி முறையாக அழிக்கப்பட்ட பின்பு, அவர் கலகம் செய்த யூதர்களால் எகிப்திற்குக் கூட்டிச் செல்லப்பட்டார். அவர் ஒரு இளைஞராக இருந்த போதே தீர்க்கதரிசியாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருந்தார், அவர் தமது சொந்த மக்களாலேயே அடிக்கடி அவதூறு பேசப்பட்டார். நாட்டின் அழிவுபற்றி அவர் கண்ணீர் சிந்தியதால், "அழும் தீர்க்கதரிசி" (எரேமியா 9:1) என்று அறியப்பட்ட அவர், ஐந்து முதன்மை வலியுறுத்தங்களுடன் செய்தியை அளித்தார். (1) பாபிலோனியர்கள் யூதாவை அழிப்பார்கள் என்பதால் நியாயத்தீர்ப்பு வந்து கொண்டிருந்தது, ஆனால் பாபிலோன் பிற்பாடு அழிக்கப்படும். (2) யூதாவின் பாவங்கள் அதன் அழிவிற்குக் காரணமாயின. (3) மக்கள் மனந்திரும்ப வேண்டும். (4) அழிவு வந்து கொண்டிருந்ததால், யூதா பாபிலோனிடம் சரணடைய வேண்டும். (5) எழுபது ஆண்டுகளில் மக்கள் அடிமைத் தனத்தை விட்டுத் திரும்பி வருவார்கள் என்பதால், யூதா இன்னமும் எதிர்காலத்திற்கு நம்பிக்கை கொண்டிருக்க முடியும். எரேமியா தீர்க்கதரிசனப் புத்தகம், ஒரு முன்னுரை (எரேமியா 1), இல்ல நிகழ்வுகள் தொடர்பான தீர்க்கதரிசனங்கள் (எரேமியா 2-45), மற்ற நாடுகள் தொடர்பான தீர்க்கதரிசனங்கள் (எரேமியா 46-51) மற்றும் ஒரு பிற்சேர்க்கை (எரேமியா 52) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

*புலம்பல், எருசலேமுக்கு அடக்கப் பாடல்கள்.* எபிரெய வேதாகமத்தில், புலம்பல்களின் புத்தகம், எழுத்துக்களின் (*Kethubim*) மத்தியில் இருந்த தோல் சுருள்களில் (*Megilloth*) அடங்கிய ஐந்து சிறுபுத்தகங்களில் ஒன்றாக இருக்கிறது. எரேமியாவினால் எழுதப்பட்டது என்று பாரம்பரியமாகக் குறிப்பிடப்பட்டுள்ள இந்தப் புத்தகம், ஒப்பாரிகளின் அல்லது அடக்கப் பாடல்களின் வரிசையாக உள்ளது. இந்தப் புத்தகம், எருசலேமின் அழிவு குறித்து புலம்ப அல்லது மாபெரும் வருத்தத்தை வெளிப்படுத்த எழுதப்பட்டது. ஆகவே கி.மு. 587/586ல்

பாபிலோனியர்களால் எருசலேம் அழிந்த நிகழ்வுதான் இந்தப் புத்தகத்தின் வரலாற்றுப் பின்னணியாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் ஐந்து அதிகாரங்கள் ஒவ்வொன்றும் ஒரு தனிப்பாடலாக உள்ளது. இவற்றில் முதல் நான்கு பாடல்கள் கரந்துரைப் பாடல்களாக (வரிகளின் முதல் அல்லது கடை எழுத்துக்களைக் கூட்டுவதால் சொல் உண்டாகும் வகையிலான பாடல்களாக) உள்ளன; இந்தப் புத்தகத்தின் கடைசிப் பாடல் கரந்துரைப் பாடலாக இல்லாவிட்டாலும், அதுவும் கூட, எபிரெய அகரவரிசையின் எழுத்துக்களின் எண்ணிக்கையான இருபத்தி இரண்டு வசனங்களைக் கொண்டுள்ளது.

*எசேக்கியேல், தரிசனத் தீர்க்கதரிசி.* "தேவன் பெலப்படுத்துவார்" என்ற அர்த்தம் கொண்ட பெயரைக் கொண்டிருந்த எசேக்கியேல் தீர்க்கதரிசி, ஒரு ஆசாரியரும் "பூசி என்பவரின் குமாரனுமாக" இருந்தார் (எசேக்கியேல் 1:3). அவர் கி.மு. 597ல் யோயாக்கீன் அரசருடன் அடிமையாகப் பிடித்துச் செல்லப்பட்டார் (எசேக்கியேல் 33:21; 40:1) மற்றும் நாடுகடத்தப் பட்டிருந்தவர்களுடன், அவர் பாபிலோனில் வாழ்ந்தார். அங்கிருந்து அவர், நாடுகடத்தப்பட்டு பாபிலோனில் இருந்தவர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் இன்னமும் யூதாவில் இருந்த யூதர்களுக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தார். அவரது தீர்க்கதரிசனங்கள் கி.மு. 593 முதல் 570 வரையில் உரைக்கப்பட்டன. எசேக்கியேலின் புத்தகம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட முடியும்: (1) எருசலேமின் அழிவிற்குப் முன்பு: *யூதாவின் மீது நியாயத்தீர்ப்பு* (எசேக்கியேல் 1-24); (2) முற்றுகை மற்றும் அழிவு ஆகியவற்றின்போது: *நாடுகளுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள்* (எசேக்கியேல் 25-32); மற்றும் (3) அழிவிற்குப் பின்பு: *யூதாவுக்கு ஆறுதல்* (எசேக்கியேல் 33-48). அவரை அழிவின் பிரசங்கியாராக்கும் வகையில் நல்லதே நடக்கும் என்ற கொள்கையை வரம்புக்கு மீறிக் கொண்டிருப்பதற்கு எதிராகக் காத்துக்கொள்ளுதல் என்பதே அவரது முதல் இலக்காக இருந்தது. எருசலேமின் அழிவுக்கு பின்பு, கெட்டதே நடக்கும் என்ற கொள்கையை வரம்புக்கு மீறிக் கொண்டிருத்தலுக்கு எதிராகக் காத்துக்கொள்ளுதல் என்பது அவரது இரண்டாவது இலக்காக இருந்தது; பின்பு அவர் ஒரு ஆறுதலின் பிரசங்கியார் ஆனார். எசேக்கியேலின் தீர்க்கதரிசனங்கள் தரிசனங்களினாலும் (காண்க எசேக்கியேல் 1; 37-39) "காட்சி உதவிகளை," விரிவான கற்பனைகளை மற்றும் பேச்சின் உருவகங்களை அவர் பயன்படுத்திய வகையினாலும் பண்புப்படுத்தப் பட்டிருந்தன.

*தானியேல், அடிமைத்தளையின் தீர்க்கதரிசி.* தானியேல் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசியாகச் சித்திரிக்கப்படுவதில்லை, ஆனால் அவர் புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறார் (மத்தேயு 24:15). தானியேல், கி.மு. 600க்கு முன்பு, நேபுகாத்நேச்சார் அரசாரால், யூதாவில் இருந்து பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துக் கூட்டிச் செல்லப்பட்டார், மற்றும் அங்கு அவர் தமது நீண்ட வாழ்நாளை வாழ்ந்தார். தானியேல் தீர்க்கதரிசனப் புத்தகம் எபிரெய வேதாகமத்தில் எழுத்துக்களில் (Kethubim) காணப்படுகிறது. இது, தானியேல் தேவன் மீது கொண்டிருந்த தமது விசுவாச நிறைவினால், அடிமைத்தளையிலும் அவர் எவ்வாறு வளம்பெற்றார், பாபிலோனிய அரசில் அவர் எவ்வாறு முக்கியமான பதவிக்கு உயர்த்தப்பட்டார் மற்றும் பிற்பாடு அதைத் தொடர்ந்து வந்த பெர்சிய அரசாட்சியிலும் அவர் எவ்வாறு உயர்த்தப்பட்டார் என்பதைக் கூறுகிறது. ஒழுக்கரீதியான புத்திமதிகளின் வழியில் மிகவும் கொஞ்சமே

அடங்கப் பெற்றுள்ள இந்தத் தீர்க்கதரிசனம் இரு பாகங்களைக் கொண்டுள்ளது: ஒரு வரலாற்றுரீதியான பகுதி (தானியேல் 1-6) மற்றும் ஒரு தரிசனப் பகுதி (தானியேல் 7-12), இது இறைவெளிப்பாட்டுத் தரிசனங்களைச் சித்தரிக்கிறது.[10] பூமியின் அரசுகள் யாவும் ஒன்றுமற்றுப்போய், ஆனால் தேவனுடைய இராஜ்யம் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் ஒரு காலம் வந்து கொண்டிருந்தது என்று யூதர்களுக்கு உறுதிப்படுத்துதலே இந்தப் புத்தகத்தின் நோக்கமாக இருந்தது. இது, துன்புறுத்தப்படும் காலத்தில் அவர்கள் தேவன்மீது விசுவாச நிறைவுடன் இருந்தால், தேவன் அவர்களுடன் இருப்பார் என்பதைப் புரிந்துகொள்ளவும் அவர்களுக்கு உதவும் புத்தகமாக இருந்தது.

***சிறிய தீர்க்கதரிசிகள்***

பன்னிரெண்டு சிறிய தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவரைப் பற்றியதுமான தொகுப்புரை பின்வருமாறு:

*ஓசியா*, இந்தப் பெயர் “இரட்சிப்பு” என்று அர்த்தப்படுகிறது, இவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் வடக்கு இராஜ்யமான இஸ்ரவேல் மக்களுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தார், அவர்களின் பாவங்களுக்காக அவர்களைக் கண்டனம் செய்தார். இருப்பினும் அவர், தேவனுடைய கட்டளையின்படி, விபசாரியாக இருந்த கோமேர் என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார், பின்பு அவள் அவரை விட்டுப் பிரிந்து சென்றபின்பு அவளைத் திரும்பவும் சேர்த்துக் கொண்டார், இது விசுவாசமற்ற இஸ்ரவேல் மக்கள் மீது தேவனுடைய அன்பிற்கான ஒரு விவரிப்பாக இருந்தது.

*யோவேல்*, தேவனுடைய மக்களின் விசுவாச விலக்கம் காரணமாக அவர்களைத் துன்புறுத்திய, வெட்டுக்கிளியினால் உண்டான வாதையை விவரித்தார். மேலும் அவர், நடபடிகள் 2ல் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் வர இருந்ததைப் பற்றியும் முன்னுரைத்தார் (2:28-32). யோவேல் புத்தகம் அடிக்கடி கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகத் தேதியிடப்படுகிறது, ஆனால் அந்தத் தேதியைப் பற்றிக் கல்வியாளர்கள் நிச்சயமற்றவர்களாக உள்ளனர். “யோவேல்” என்றால் “யெகோவாவே தேவன்” என்று அர்த்தப்படுகிறது.

*ஆமோஸ்*, என்ற பெயர் “பாரம் சுமப்பவர்” என்று அர்த்தப்படுகிறது, இவர் யூதா என்ற தெற்கு இராஜ்யத்தில் ஒரு மேய்ப்பராகவும் மந்தையாளராகவும் இருந்தார். அவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் ஏறக்குறைய மையகாலத்தில் வடக்கு இராஜ்யத்தில் இருந்த மக்களுக்குத் தீர்க்கதரினம் உரைப்பதற்காக தேவனால் அனுப்பப்பட்டார். அவர் இஸ்ரவேலுக்கு அழிவின் செய்தியைக் கொண்டுவந்தார், அவர்களின் பாவங்களுக்காக வரவிருந்த அழிவை அவர் முன்னுரைத்து மக்களை அவர் கண்டனம் செய்தார்.

*ஒபதியா*, ஏதோமியர்கள் தேவனுடைய மக்களைத் தவறாக நடத்தியதற்காக அவர்களை (ஏதோமியரை) கண்டனம் செய்தார். அவரது தீர்க்கதரிசனம் ஒரே ஒரு அதிகாரத்தைக் கொண்டுள்ள புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம், பாபிலோன் அரசினால் யூதா முற்றுகை இடப்பட்ட வேளையான கி.மு. 587/86ல் எழுதப்பட்டிருக்கலாம்; ஆனால் இதன் தேதி பற்றிய கருத்து ஒருமைப்பாடு எதுவும் இல்லை. “ஒபதியா” என்றால் “யெகோவாவின் ஊழியக்காரர்” என்று அர்த்தப்படுகிறது.

*யோனா,* என்ற பெயர் "புறா" என்று அர்த்தப்படுகிறது, இவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு அண்மையில் வாழ்ந்தார். நினிவேக்குச் சென்று தீர்க்கதரிசனம் உரைக்கும்படி யோனாவினிடத்தில் தேவனால் கூறப்பட்டது, ஆனால் அவர் ஒரு கப்பலில் தர்சீஷ் அல்லது ஸ்பெயின் என்ற இடத்தை நோக்கிச் சென்றார். புயலில் அகப்பட்ட அந்தக் கப்பலில் இருந்தவர்களால், அவர் கடலில் தூக்கி எறியப்பட்டு ஒரு பெரிய மீனினால் விழுங்கப்பட்டார். அவர் ஜெபம் செய்த பின்பு, கடற்கரையில் அவர் துப்பப்பட்டார். பின்பு அவர் நினிவே நகருக்குச் சென்று அதன் அழிவை முன்னுரைத்தார். மக்கள் மனந்திரும்பினர்; ஆகவே தேவன் தமது மனதை மாற்றிக்கொண்டு அந்த நகரத்தை அழிக்காமல் விட்டார். இந்த முடிவு பற்றி யோனா வருத்தம் அடைந்தார். நினிவே நகரத்தார் மனந்திரும்பியபோது யோனா அகம் மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதே இந்த வரலாற்றின் கருத்தாக உள்ளது.

*மீகா,* இவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் தீர்க்கதரிசியாக இருந்தார். இவர் தெற்கு இராஜ்யத்தில் வாழ்ந்து வந்தார், ஆனால் பல்வேறு பாவங்களுக்காக இவர் யூதா மற்றும் இஸ்ரவேல் ஆகிய இரு இராஜ்யங்களையும் கண்டனம் செய்தார். மீகா 4:1-3 வசனங்கள், வரவிருந்த இராஜ்யம் பற்றிய வசனப்பகுதி யாக உள்ளது, இது ஏசாயா 2:2-4ஐப் போன்றதாக உள்ளது. மீகா என்ற பெயர் "யெகோவாவைப் போன்றவர் யார்?" என்று அர்த்தப்படுகிறது.

*நாகூம்,* இவரது பெயர் "ஆறுதல்" என்று அர்த்தப்படுகிறது, இவர் கி.மு. ஏழாம் நூற்றாண்டின் முடிவுக்கு அண்மையில் எழுதினார். இவர் நினிவே நகரின் அழிவு பற்றி முன்னுரைத்தார். முன்னதாகத் தேவன் நினிவேயை அழிக்காமல் விட்டார்; ஆனால் அந்த மக்கள் பாவத்தில் நிலைத்திருந்தனர், எனவே கடைசியில் தேவன் நகரத்தை (மற்றும் அது பிரதிநிதித்துவப்படுத்திய மக்களினத்தை) அழிக்கத் தீர்மானித்தார்.

*ஆபகூக்* தீர்க்கதரிசி, பாபிலோன் அரசால் யூதா அழிக்கப்படுவதற்கு சற்று முன்னால் தீர்க்கதரிசனம் உரைத்தார். அவரது புத்தகம், தீர்க்கதரிசியை (மற்றும் மக்களை) கவலைக்குள்ளாக்கிய கேள்விகளை - "துன்மார்க்கரை அழிப்பதன் மூலம் தேவன் விஷயங்களைச் சரிப்படுத்துவதற்காக நாங்கள் இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்?" மற்றும் "துன்மார்க்கமான ஒரு மக்களினத்தை (யூதாவை) அழிக்க இன்னும் அதிக துன்மார்க்கமான ஒரு மக்களினத்தை (பாபிலோனை) தேவன் ஏன் அனுமதிக்க வேண்டும்?" என்பது போன்ற கேள்விகளை - கையாளுகிறது.

செப்பனியா, இவர் யூதாவின் அழிவிற்கு முன் சற்றுகாலத்திலேயே தீர்க்கதரிசனம் உரைத்தார், இவர் "கர்த்தருடைய நாளை" - மக்களினங்கள் அழிய வருதல் - வலியுறுத்தினார், ஆனால் ஒரு சிறுபகுதி மக்கள் காக்கப்படுவார்கள் என்றும் போதித்தார். "செப்பனியா" என்றால் "யெகோவா தேவனுக்குள் ஒளித்துவைக்கப்பட்டவர்" என்று அர்த்தப்படுகிறது.

*ஆகாய்,* இந்தப் பெயர் "பண்டிகை" என்று அர்த்தப்படுகிறது, இவர் அடிமைத்தளையில் இருந்து திரும்பி வந்ததற்குப் பின் இருந்த மூன்று தீர்க்கதரிசிகளில் ஒருவராக இருந்தார். கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முடிவுப்பகுதியில், சகரியாவுடன் சேர்ந்து இவர், பாபிலோனியா அடிமைத் தளையில் இருந்து திரும்பி வந்திருந்த மக்களிடத்தில், தேவாலயத்தைத் திரும்பக் கட்டுதலை முடிக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். இவரது செய்தி மிகவும்

நடைமுறையானதாக இருந்தது: மக்கள் தங்கள் சொந்த வீடுகளைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டனர், அவர்கள் தேவனுடைய வீட்டை மறுபடியும் கட்டி எழுப்புவது அவசியம்.

*சகரியா*, இவர் மேற்கூறப்பட்ட - தேவாலயம் மறுபடியும் கட்டப்படுதல் என்ற - அதே இலக்கிற்காக, ஆகாயுடன் சேர்ந்து தீர்க்கதரிசனம் உரைத்தார். இருப்பினும் இவர் மாறுபட்ட ஒரு முறையைப் பயன்படுத்தினார், மக்கள் பணியை முடிக்கும்படி அவர்களை ஊக்குவிப்பதற்காகத் தேவன் இவர்களுக்குக் கொடுத்த தரிசனங்களை இவர் விவரித்தார். "சகரியா" என்றால் "யெகோவா தேவனால் நினைவுகூரப்பட்டவர்" என்று அர்த்தப்படுகிறது.

*மல்கியா,* இந்தப் பெயர், "எனது தூதர்" என்று அர்த்தப்படுகிறது, இவர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், யூதாவின் மக்களுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தார், பல பாவங்களுக்காக அவர்களை இவர் கடிந்துகொண்டார்: பலிகளைத் தீட்டுப்படுத்துதல், மோசமாக்கப்பட்ட ஆசாரியத்துவம், அவர்கள் தங்கள் திருமண வாக்குறுதிகளைக் கைவிடுதல் மற்றும் தாங்கள் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுக்காமல் தேவனை "வஞ்சித்தல்." மல்கியாவின் அக்கறைகள் எஸ்றா மற்றும் நெகேமியா ஆகியோரின் அக்கறைகளைப் போன்றவையாக இருந்தன.

## தீர்க்கதரிசன இலக்கியத்திற்கு விளக்கம் அளித்தல்

தீர்க்கதரிசனப் புத்தகங்கள் மிகச்சரியாக விளக்கம் அளிக்கும் அளவுக்குச் சுலபமானவைகள் அல்ல. பின்வரும் பல காரணங்களினால் தீர்க்கதரிசனப் புத்தகங்களைப் புரிந்துகொள்வதில் சிரமங்கள் எழலாம்: (1) இன்னமும் நமக்கு எதிர்காலமாக இருக்க அவசியமற்ற எதிர்கால நிகழ்வுகளைத் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர் என்பதைக் காண மக்கள் தவறுகின்றனர். (2) பேசுபவர்கள் என்ற வகையில் தீர்க்கதரிசிகளின் பணிப்பொறுப்பை வாசகர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கலாம், தீர்க்கதரிசிகள் முன்னுரைப்பவர்களாகவும் "இவ்வாறு கூறுகிறேன்" என்பவர்களாகவும் இருந்தனர் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறலாம். (3) தீர்க்கதரிசிகள் பேசிய வரலாற்றுரீதியான சூழ்நிலைகளை அறிவதில் உள்ள சிரமங்களின் காரணமாக, தனித்தனித் தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்களைப் புரிந்து கொள்ளுதல் கடினமானதாக இருக்கலாம். (4) தீர்க்கதரிசனப் புத்தகங்களின் வடிவமைப்பு - பல விஷயங்களில் அவைகள் பேசப்பட்ட உரைகள் பாடலாக எழுதப்பட்டதன் தொகுப்பாக உள்ளன என்ற உண்மையில் - அவற்றிற்கு விளக்கம் அளித்தல் சிரமமானது ஆகலாம்.

தீர்க்கதரிசிகள் கூறியது என்ன என்பதைப் படிப்பதிலும் புரிந்துகொள்வதிலும் மதிப்பு உள்ளது. அவர்களின் செய்தி தேவனிடத்தில் இருந்தே வந்தது (எபிரெயர் 1:1, 2). தேவன் ஏவியுள்ள எதுவும் ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியுள்ளதாகவே உள்ளது. அவர்கள் மேசியாவைப் பற்றியும் மேசியாவின் யுகத்தைப் பற்றியும் பேசியதால், தேவன் அனுப்பிய கிறிஸ்துவை இன்னும் முழுமையாக அறியவும் மதிக்கவும், அவற்றை நாம் படிக்க முடியும்.

*தீர்க்கதரிசிகள் கூறியவற்றில் அதிகமானவை தேவனுடைய மக்களுக்கு நடைமுறைப்படுத்தப் படக்கூடும்* என்பது இந்தப் புத்தகங்களைப் படிப்பதற்கான ஒரு காரணமாக உள்ளது. ஏன்? (1) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் மக்கள் கொண்டிருந்து போன்றே, கிறிஸ்தவர்கள் தேவனுடன் ஒரு

உறவுமுறையைக் கொண்டுள்ளனர் (யாத்திராகமம் 19:5, 6 மற்றும் 1 பேதுரு 2:9, 10 ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவும்). (2) தேவன் மாறாதவராக இருக்கிறார், மற்றும் அவர் மனிதகுலத்தைக் கையாள்வதற்குக் கொண்டுள்ள கொள்கைகளும் மாறாதவைகளாகவே இருக்கின்றன. (3) பழைய உடன்படிக்கையின் ஒழுக்கரீதியான மற்றும் நீதிநெறிரீதியான தரஅளவைகள், புதிய ஏற்பாட்டின் ஒழுக்கரீதியான மற்றும் நீதிநெறிரீதியான தர அளவைகளில் இருந்து பெரிதாக மாறுபடுவதில்லை. இஸ்ரவேல் மக்கள் பழைய உடன்படிக்கையின் ஒழுக்கரீதியான மற்றும் நீதிநெறிரீதியான தர அளவைகளின்படி வாழவேண்டும் என்று அவர்களைத் தீர்க்கதரிசிகள் ஊக்குவித்ததால், அவர்கள் கூறியவற்றில் அதிகமானவை இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கும் நடைமுறைப்பட முடியும்.

தீர்க்கதரிசனப் புத்தகங்களுக்கு நாம் எவ்வாறு விளக்கம் அளிக்கப் போகிறோம்? பின்வரும் ஆலோசனைகள் உதவிநிறைந்தவையாக இருக்கலாம்:[11]

### 1. தீர்க்கதரிசிகளின் பணிப்பொறுப்பைப் புரிந்து கொள்ளுதல்

தீர்க்கதரிசிகள் எழுதியவற்றைப் புரிந்துகொள்வதற்கு நாம், பல உண்மைகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். (1) தீர்க்கதரிசிகள் தேவனிடத்தில் இருந்து பேசினர் (எபிரெயர் 1:1, 2; 2 பேதுரு 1:20, 21). (2) மக்கள், தேவனுடன் தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையைக் காத்துக்கொள்ளும்படி வேண்டிக்கொள்வதும் அதன் நிபந்தனைகளை அவர்கள் மதிக்காதபோது ஏற்படும் விளைவுகளைக் குறித்து எச்சரிப்பதும் தீர்க்கதரிசிகளின் பணிப்பொறுப்பாக இருந்தது.[12] (3) தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த நாட்களுக்கான செய்திகளைக் கொண்டிருந்தனர். தோற்றகாலத்தில் தீர்க்கதரிசன உரைப்புகளைக் கேள்விப்பட்டவர்களுக்கு *அர்த்தப்படாத வகையில்,* அவற்றிற்குத் தரப்படும் எந்த விளக்கமும் அனேகமாகத் தவறானதாகவே இருக்கிறது எனலாம்.

### 2. வசனப்பகுதியை அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் பகுத்து ஆராய்தல்

*தீர்க்கதரிசனத்தின் சந்தர்ப்பப் பொருளைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.* தீர்க்கதரிசிகள் யாவரும் ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பப் பொருளில் தீர்க்கதரிசனம் உரைத்தனர். எந்த ஒரு குறிப்பிட்ட தீர்க்கதரிசனத்தையும் புரிந்துகொள்வதற்கு, நாம் அந்தத் தீர்க்கதரிசனத்திற்கான சந்தர்ப்பப் பொருளை (நம்மால் முடிந்தது என்றால்) அடையாளப்படுத்தியாக வேண்டும். அந்தத் தீர்க்கதரிசி எப்போது வாழ்ந்தார் மற்றும் அவரது காலத்தில் பொதுவான சூழ்நிலைகள் யாவை என்பவற்றை நாம் அறிதல் அவசியமாகிறது. பின்பு நாம், குறிப்பாக இயன்ற அளவுக்கு, ஒரு குறிப்பிட்ட உரையானது எப்போது மற்றும் என்ன சூழ்நிலைகளில் உரைக்கப்பட்டது என்பதை அறிதல் அவசியமாகிறது.

*புத்தகத்தில் அடங்கியிருப்பவை பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.* புத்தகத்தை முழுமையான வகையில் அதன் ஆய்வுக்கருத்து அல்லது முதன்மைச் செய்தியைத் தீர்மானித்த பின்பு, புத்தகத்தின் வடிவமைப்பைப் பற்றி நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆர்வத்திற்குரிய ஒரு குறிப்பிட்ட வசனப் பகுதியைப் பகுத்து ஆராய்தல் என்பது அடுத்த படிநிலையாக உள்ளது, இதில் நாம்,

"இவ்வசனப் பகுதியில் பேசுவது யார்? யாரிடத்தில் பேசுகிறார்? எதைப்பற்றிப் பேசுகிறார்? என்ன நோக்கத்திற்காகப் பேசுகிறார்?" என்று கேட்க வேண்டும். விளக்கம் அளிக்கப்படும் வசனப்பகுதியானது புத்தகம் முழுமைக்குமான ஆய்வுக்கருத்துடன் எவ்வாறு தொடர்புபடுகிறது என்று மதிப்பிடுதல் விசேஷித்த வகையில் முக்கியமானதாக உள்ளது.

*செய்தியின் நோக்கத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.* இந்த இடத்தில் கேட்கப்பட வேண்டிய சில முக்கியமான கேள்விகள் பின்வருமாறு: "இந்த உரை தரப்பட்டது ஏன்?"; "இந்தத் தீர்க்கதரிசனத்தின் மூலமாகத் தேவன் நிறைவேற்றத் திட்டமிட்ட குறிக்கோள் என்ன?"; மற்றும், "இதை முதலில் கேள்விப்பட்டவர்கள் அல்லது முதலில் வாசித்தவர்கள் எவ்வாறு இதைப் புரிந்து கொண்டிருப்பார்கள்?" நாம், தீர்க்கதரிசனத்தின் தோற்றகால நோக்கத்தைக் காணத் தவறக்கூடாது. ஒரு சந்தர்ப்பத்தில் ஆமோஸ், தேவனிடத்தில் இருந்து பின்வரும் செய்தியை உரைத்தார்: "பெத்தேலுக்குப் போய்த் துரோகம் பண்ணுங்கள். ... காலைதோறும் உங்கள் பலிகளையும், மூன்றாம் வருஷத்திலே உங்கள் தசமபாகங்களையும் செலுத்தி, ... இஸ்ரவேல் புத்திரரே, இப்படிச் செய்வதே உங்களுக்குப் பிரியம்" (ஆமோஸ் 4:4, 5). இந்த வார்த்தைகள் வஞ்சப்புகழ்ச்சியாக இருந்தன (அவர்களின் பலிகள் பற்றித் தேவனுடைய எண்ணப்போக்கை, 5:21-24ல் காணவும்). ஆமோஸ் 4:4, 5 வசனங்களின் நோக்கத்தைப் பற்றி நாம் சிந்திக்காதிருந்தால், இவ்வசனப் பகுதியில் உள்ள முரண்தொடரை நாம் தவற விட்டு இதற்குத் தவறாக விளக்கம் அளிப்போம்.

வசனப்பகுதிகளின் நோக்கத்தை மனதில் காத்துக்கொள்ளத் தவறுதல், விளக்கம் அளிப்பவர் அந்த வசனப்பகுதிகளை அவற்றின் சந்தர்ப்பப் பொருளில் இருந்து எடுத்து அவற்றிற்குத் தவறான அர்த்தங்களைக் குறிப்பிடுவதற்குக் காரணம் ஆகலாம், ஆமோஸ் 6:5ம் வசனம், "தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி," என்பது பற்றிச் சிலவற்றைப் பேசுகிறது. KJV வேதாகமம், "... that chant to the sound of the viol, and invent to themselves instruments of music like David" என்று கூறுகிறது. நன்கு அர்த்தப்படும்படி பேசும் பிரசங்கியார்கள் இவ்வசனப் பகுதியை, ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது தவறாக உள்ளது என்று போதிக்கப் பயன்படுத்தியுள்ளனர்.[13] இருப்பினும் சந்தர்ப்பப் பொருள், ஆராதனையைக் குறித்ததாக அல்ல, ஆனால் இஸ்ரவேல் நாடு அழிக்கப்படுதல் பற்றிக் கவலைப்படாது, பாவத்தில் வாழ்ந்த செல்வந்தர்களான இஸ்ரவேல் மக்களைக் குறிப்பதாக இருந்தது (ஆமோஸ் 6:6). இங்கு விவரிக்கப்பட்ட இசை என்பது ஆராதனையில் பயன்படுத்தப் பட்டதல்ல, ஆனால் செல்வந்தர்களின் மயக்கும், ஆடம்பர வாழ்வில் பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தப் பட்டதாக இருந்தது.

"கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்" என்று கூறும் ஏசாயா 62:2ஆ வசனம், விசேஷித்த கவனம் தேவைப்படுகிற இன்னொரு வசனப்பகுதியாக உள்ளது. இவ்வார்த்தைகள், இயேசுவின் சீஷர்கள் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட்டபோது நிறைவேற்றம் அடைந்த மேசியாத்துவ தீர்க்கதரிசனம் என்று அடிக்கடி நினைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இவ்விடத்தில் தீர்க்கதரிசி, மேசியாவைப் பற்றிய எந்த விஷயத்தையும் முன்னுரைக்கவில்லை. மாறாக அவர், "கைவிடப்பட்டது"

(வசனம் 4) என்று அழைக்கப்பட்டிருந்த எருசலேம் (ஏசாயா 62:1), மகிமைக்கு திருப்பப்படும்போது, அது தேவனால், “கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்” என்றும் (வசனம் 4) “வாழ்க்கைப்பட்டவள்” என்றும் அழைக்கப்படும் என்பதை விவரித்தார். இவ்வசனம் கிறிஸ்துவின் சீஷர்களில் நிறைவேற்றப்பட்டது என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் குறிப்பு எதுவும் இல்லை, எனவே அனேகமாக, இவ்வசனப்பகுதி மேசியாத்துவத் தீர்க்கதரிசனமாக இருப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

*உரை மற்றும் பாடல் ஆகியவை தன்னில் கொண்டுள்ள வடிவத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.* தீர்க்கதரிசன உரைகள் பல்வேறு விதத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கோர்டன் D. ஃபீ. மற்றும் டக்ளஸ் ஆகியோர் தீர்க்கதரிசன உரையின் ஐந்து வடிவங்கள் பற்றிக் கலந்துரையாடினர்: பிரமாணவழக்கு, சாபம், வாக்குத்தத்தம், தீர்க்கதரிசனம் சட்டமியற்றப்படுதல் மற்றும் செய்தியாளர் பேச்சு.[14] உரை எடுத்துக்கொள்ளும் வடிவத்தை உணர்ந்தறிதல் என்பது அதைப் புரிந்துகொள்வதைச் சுலபமாக்கலாம். எபிரெயப் பாடலுக்கு விளக்கம் அளிக்க நடைமுறைப் படுத்தப்படும் அதே கொள்கைகள், தீர்க்கதரிசனங்களில் உள்ள பாடல்வடிவ வசனப்பகுதிகளுக்கும் நடைமுறைப்படுகின்றன.

*செய்தியின் வார்த்தை அமைப்பைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.* தீர்க்கதரிசன இலக்கியத்தின் அதிகமான பகுதி பாடல் வடிவில் எழுதப்பட்டிருப்பதால், பாடல்கள் இலக்கியம் பற்றி முன்பு நாம் படித்தவை இதற்கும் நன்கு நடைமுறைப்படுகிறது. தீர்க்கதரிசனப் புத்தகங்களில் உள்ள பாடல் பகுதிகளில் நாம், பேச்சு உருவகங்களை ஏராளமாகக் காணுகிறோம். ஏசாயா 11:6-9 வசனப்பகுதி மேசியாத்துவ அரசைப் பற்றிப் பேசுகிறது என்பது தெளிவு, இது “அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், ... பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்” என்று கூறுகிறது. இந்தக் கூற்றுகள் நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்படக் கூடாதவைகளாக இருந்தன. ஒன்று மற்றொன்றுடன் யுத்தத்தில் இருந்த குழுக்கள், வரவிருந்த மேசியாவின் இராஜ்யத்தில் சமாதானமாக இருக்கும் என்று ஏசாயா மூலமாகத் தேவன் கூறினார். “பாசானின் மாடுகள்” (ஆமோஸ் 4:1) என்பது, ஏழைகளை வலுக்கட்டாயமாக அடக்கி வைத்த, பணக்கார, சோம்பேறித்தனமான, சுய இன்பத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த மனைவிகளை உருவகிக்கும் வழியாக இருந்தது. தேவன் இஸ்ரவேல் மக்களை “அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளி”க்கு (4:11) ஒப்பிட்டார் என்பது, முற்றிலுமான அழிவில் இருந்து மக்கள் போதும்போதாமல் காக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காண்பித்தது. உருவகமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மொழிநடை எதையும் நாம் நேரடியான அர்த்தத்தில் விளக்கம் அளிக்காதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### 3. தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் பற்றிய கேள்வியை ஆழ்ந்து சிந்தியுங்கள்

தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த நாட்களில் இருந்த மக்களுக்கு, தேவனிடத்தில் இருந்து வந்த செய்தியொன்றைப் பிரசங்கித்ததால், சிலவேளைகளில்

அவர்களின் வார்த்தைகள், அவர்கள், உரைத்துக் கொண்டிருந்த பிரச்சனைகளை மாத்திரம் கையாண்டன. இருப்பினும், தீர்க்கரிசனப் புத்தகங்களில் உள்ள பல வசனப்பகுதிகள் எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டியவைகளாக இருந்தன. அவற்றிற்கு நாம் எவ்வாறு விளக்கம் அளிக்க வேண்டும்?

*(1) முன்னுரைப்புத் தீர்க்கதரிசனம் என்பதைப் போன்ற விஷயம் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்,* இது தாராளமயக் கல்வியாளர்கள் சிலரின் கண்ணோட்டத்திற்கு எதிராக நேரெதிரானதாக உள்ளது, அவர்கள் இப்படிப்பட்ட விஷயங்கள் நிலவுவது இல்லை என்று மறுக்கின்றனர்.

*(2) மேசியாவைப் பற்றியும் வரவிருந்த அவரது இராஜ்யத்தைப் பற்றியும் தீர்க்கதரிசிகள் பேசினர் என்பதை நினைவில் வையுங்கள்* (காண்க நடபடிகள் 3:24-26; ரோமர் 1:4). சிலவேளைகளில் அவர்கள் கூறியவற்றை அவர்களே புரிந்துகொள்ளவில்லை (காண்க 1 பேதுரு 1:10-12). *ஒரு குறிப்பிட்ட தீர்க்கதரிசனம் கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறதா அல்லது சபையைக் குறிப்பிடுகிறதா என்பதைப் புதிய ஏற்பாடு அவ்வாறு கூறுகிறதா என்பதைக் கொண்டே நிச்சயமாக நாம் அறிய முடியும்.*

*(3) தீர்க்கதரிசிகள் முதன்மையாகத் தங்கள் காலத்தைப் பற்றியும் இஸ்ரவேல் மக்களின் சூழ்நிலைகளைப் பற்றியும் பேசினர் என்பதை உணர்ந்து அறியுங்கள்.* ஜேக் லூயிஸ் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> அசீரியர்கள் மற்றும் பாபிலோனியர்கள் ஆகியோரால் நாடுகடத்தப்படுவதற்கு முன்னதாகவும் சற்றுப் பின்னதாகவும் தீர்க்கதரிசிகள் வாழ்ந்தனர். இந்தப் பெருந்துன்பங்களில் அழிவைப் பற்றிய அச்சுறுத்துதல்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட திரும்புதல் என்பது பாபிலோனில் இருந்து திரும்புதலாக உள்ளது. நாடுகடத்தலில் இருந்து திரும்பியபின் இருந்த மக்களுக்கு, அவர்களின் பிதாக்களுக்கு எதிராக இருந்து நிறைவேற்றப்பட்ட அச்சுறுத்துதல்களை சகரியா தீர்க்கதரிசி நினைவூட்டினார் (சகரியா 1:5, 6).[15]

*(4) தீர்க்கதரிசனம் நிபந்தனைக்கு உட்பட்டதாக இருந்தது என்பதை மனதில் காத்துக்கொள்ளுங்கள்.* அதாவது, கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதங்களையும் கீழ்ப்படியாமைக்கு அழிவையும் - தேவனுடைய சார்பில் - தீர்க்கதரிசிகள் வாக்களித்தனர். மக்கள் கலகம் செய்தால், ஆசீர்வாதங்கள் வராதிருந்தன; அவர்கள் மனந்திரும்பினால் அழிவு நடக்காதிருந்தது. மனந்திரும்புதலின் சாத்தியக்கூற்றைக் குறிப்பிடாமல், நினிவே அழிக்கப்படும் என்று யோனா தீர்க்கதரிசனம் உரைத்தார்; ஆனால் மக்கள் மனந்திரும்பியபோது, தேவன் நினிவேயை அழிக்காமல் விட்டார். யோனா நிபந்தனைகளை அறிவிக்காமல் இருந்தாலும்கூட, அழிவின் அச்சுறுத்துதல் நிபந்தனைக்கு உட்பட்டதாக இருந்தது. ஆசீர்வாதங்கள் அல்லது அழிவு என்பற்றின் தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்கள் செயல்படுத்தப்பட்டவைகளாகக் காணப்படாவிட்டால், அது - உரைக்கப்பட்ட அல்லது உரைக்கப்படாத - நிபந்தனைகள் சந்திக்கப்பட்டன அல்லது சந்திக்கப்படாதிருந்தன என்பதன் காரணமாக அவ்வாறு இருக்கலாம்.

*(5) சில தீர்க்கதரிசனங்கள் "அண்மை" மற்றும் "தூரமான" என்ற இரு நிறைவேற்றங்களையும் கொண்டிருந்தன என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.*

ஏசாயா 7:14ல் தரப்பட்டுள்ள தீர்க்கதரிசனம் - "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" - ஆகாஸ் அரசரின் நாட்களில் நிறைவேற்றப்பட வேண்டியது என்பது தெளிவு (ஏசாயா 7ன் சந்தர்ப்பப் பொருளைக் கண்ணோக்கவும்). இது ஒரு "அண்மை" நிறைவேற்றமாக இருந்தது. இருப்பினும், இது இயேசுவின் பிறப்பில் நிறைவேற்றப்பட்டது என்று ஏவுதல் பெற்ற எழுத்தாளரான மத்தேயு கூறினார் (மத்தேயு 1:21). இது ஒரு "தூரமான" நிறைவேற்றமாக இருந்தது. பொதுவாக மேசியா பற்றிய தீர்க்கதரிசனத்தில், புதிய ஏற்பாட்டில் ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டதா என்பதை, ஏவுதல் பெற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் அல்லது பேச்சாளர் அவ்வாறு கூறியதை வைத்தே நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும்.

*(6) கிறிஸ்துவைப் பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் பல, அவரது முதல் வருகை மற்றும் அவரது இராஜ்யமாகிய சபை நிலைநாட்டப்படுதல் ஆகியவற்றில் நிறைவேற்றப்பட்டன என்பதை நினைவில் வையுங்கள்.* அவற்றில் ஒரு சில தீர்க்கதரிசனங்கள் மாத்திரமே, கி.பி. முதல் நூற்றாண்டின் முடிவு வேளையில் நிறைவேற்றப்படும்படி விட்டுவிடப் பட்டிருந்தன. இயேசு, "மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே" என்று கூறினார் (லூக்கா 24:44).

மேலும் இயேசு, "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் கூறினார் (மத்தேயு 5:17, 18). இவை யாவும் நிறைவேற்றப்படாத வரையில், பிரமாணம் முழுவதும் அமுலில் இன்னமும் நிலைத்திருக்கும். இருப்பினும் புதிய ஏற்பாட்டின் வேறொரு இடத்தில் காணப்படும் சாட்சியத்தின்படி, பிரமாணம் இனியும் அமுலில் இருப்பதில்லை என்று நாம் அறிகிறோம்; ஆகையால், பிரமாணத்தின் முழுமைத் தன்மையும் தீர்க்கதரிசனங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 4. ஆயிரம் ஆண்டு அரசாட்சியைப் பற்றி சீர்பொருத்தமான அணுகுமுறையை மேம்படுத்துங்கள்.

எல்லா விஷயங்களும் முடிவுக்கு வருவதற்கு முன்னர், பூமியின் மீது ஒரு அரசாட்சியை ஏற்படுத்தி ஆயிரம் ஆண்டுகாலம் ஆட்சிசெலுத்த கிறிஸ்து மறுபடியும் வருவார் என்று ஆயிரம் ஆண்டு அரசாட்சிக் கொள்கையாளர்கள், நம்புகின்றனர். ஆயிரம் ஆண்டு அரசாட்சிக் கொள்கையாளர்கள் ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்ற கருத்தைப் புதிய ஏற்பாட்டில் (வெளிப்படுத்தின விசேஷம் 20 மற்றும் பிற வசனப்பகுதிகளில்) இருந்து பெற்றுக்கொண்டுள்ளனர் என்றாலும், அவர்கள் பல விபரங்களை அவைகள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுடன்

இணைவு கொண்டுள்ள வகையில் எடுத்துக் கொள்கின்றனர். அப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு விளக்கம் அளிக்கப்பட வேண்டும்?

மேலே கலந்துரையாடப்பட்டுள்ள கொள்கைகளில் ஒன்று அல்லது அதற்கு அதிகமானவற்றை மீறாமல், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை ஆயிரம் ஆண்டு அரசாட்சியுடன் இணைவு படுத்துதல் கடினமானது என்பது, ஆயிரம் ஆண்டு அரசாட்சிக் கொள்கையில் உள்ள ஒரு பிரச்சனை ஆகும். (1) ஆயிரம் ஆண்டு அரசாட்சி விளக்கம் என்பது தோற்றகாலக் கேட்பாளர்களுக்குக் கருத்து எதையும் ஏற்படுத்தியிருக்காது. (2) இப்படிப்பட்ட விளக்கம் அளித்தல், தீர்க்கதரிசனத்தில் செய்தியின் தெளிவான நோக்கத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. (3) பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு நடைமுறைப்படுத்தப்படும்படி விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் எந்த வசனப்பகுதியும் சுட்டிக்காண்பிப்பதில்லை. (4) ஒரு வசனத்தை அதன் சந்தர்ப்பப் பொருளில் இருந்து திரித்துக் கூறாமல், ஆயிரம் ஆண்டு அரசாட்சிக் கண்ணோட்டத்தில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கம் அளிக்க இயலாது. ஆயிரம் ஆண்டு அரசாட்சிக் கொள்கைக்காரர்களின் ஒரு புத்தகத்தில், பழைய ஏற்பாட்டின் ஒரு தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் முதல் வருகையைப் பற்றியதாகவும் அடுத்த சொற்றொடர் அவரது இரண்டாவது வருகையை (அவரது கூற்றின்படி, ஆயிரம் ஆண்டு அரசாட்சித் தரிசனத்தை) பற்றியதாகவும் உள்ளதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[16] அவ்வகையான விளக்கம் அளித்தல், தீவிரமான சீர்பொருத்தமற்ற தன்மையைக் காண்பிக்கிறது. (5) ஆயிரம் ஆண்டு அரசாட்சி ரீதியான விளக்கம் அளித்தல், பழைய ஏற்பாட்டின் பெரும்பான்மையான தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவின் முதல் வருகை மற்றும் அவரது சபை நிலைநாட்டப்படுதல் ஆகியவற்றில் நிறைவேற்றப்பட்டன என்பதற்கான சாட்சியத்தைப் புறக்கணிக்கிறது.

*பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகள், காலங்களின் முடிவு பற்றி அரிதாகவே பேசுகின்றன மற்றும் அவைகள், காலங்களின் முடிவுக்குச் சற்று முன்னதாக பூமிக்குரிய ஒரு இராஜ்யம் நிலைநாட்டப்படும் என்று ஒருக்காலும் முன்னு ரைப்பதில்லை* என்று முடிவு செய்தல் மிகச்சிறந்ததாகக் காணப்படுகிறது.

## முடிவுரை

தீர்க்கதரிசிகளின் போதனைகள் இன்றைய நாட்களில் எவ்வாறு மிகச்சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படக் கூடும்? தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் மக்களுக்குப் பேசினர் என்பதால், அந்தத் தீர்க்கதரிசிகள் இன்றைய நாட்களில் "ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்களுக்கு" - சபைக்கு - பேசுவதை நாம் அனுமதிக்க வேண்டும். தீர்க்கதரிசனங்களில் உள்ள சில வசனப்பகுதிகள் புரிந்துகொள்ளக் கடினமானவைகளாக இருக்கையில், தேவனுக்கு கீழ்ப்படிதல் பற்றிய அவர்களின் போதனை எளியதாகவும் இன்றைய நாட்களில் உலகத்தில் உள்ள மக்களால் கேட்கப்பட வேண்டியதாகவும் உள்ளது.

---

குறிப்புகள்

[1]எபிரெய வேதாகமத்தில் தீர்க்கதரிசனங்கள் என்பவற்றில், முந்திய தீர்க்கதரிசிகள் (நான்கு புத்தகங்கள் - யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல், இராஜாக்கள்)

மற்றும் பிந்திய தீர்க்கதரிசிகள் (நான்கு புத்தகங்கள் - ஏசாயா, எரேமியா, எசேக்கியேல்) மற்றும் பன்னிருவர் [சிறிய தீர்க்கதரிசிகள்] என்ற புத்தகங்கள் அடங்கியுள்ளன. இரு புத்தகங்கள் புலம்பல் - மற்றும் தானியேல், இவை ஆங்கில மற்றும் தமிழ் வேதாகமத்தில் "தீர்க்கதரிசனங்கள்" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன - எபிரெய வேதாகமத்தில் எழுத்துக்கள், அதாவது *Kethubim* என்ற பகுதியில் காணப்படுகின்றன. [2]வரலாற்றுப் புத்தகங்களில் பேசப்பட்ட தீர்க்கதரிசிகளுக்கு அப்பால், மோசே, எலியா, எலிசா, சாமுவேல், நாத்தான், மிகாயா மற்றும் செமேயா ஆகியோர் தீர்க்கதரிசனப் புத்தகங்களை எழுதினர். பெண் தீர்க்கதரிசிகள் என்பதும் பழைய ஏற்பாட்டில் - குறிப்பாக, மிரியாம், தெபோராள் மற்றும் உல்தா ஆகியோர் தீர்க்கதரிசனம் உரைத்ததாக - குறிப்பிடப்பட்டுள்ளது. [3]தீர்க்கதரிசிகளுக்கு (தேவனிடத்தில் இருந்து வந்த) அழைப்புப் பற்றிப் பின்வரும் உதாரணங்களைக் காணவும்: ஏசாயாவுக்கு அழைப்பு (ஏசாயா 6), எரேமியாவுக்கு அழைப்பு (எரேமியா 1:4-19) மற்றும் எசேக்கியேலுக்கு அழைப்பு (எசேக்கியேல் 1-3). மேலும் மோசேக்கு அழைப்பு (யாத்திராகமம் 3; 4), சாமுவேலுக்கு அழைப்பு (1 சாமுவேல் 3) மற்றும் ஆமோசுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு பற்றிய அவரது மறைமுகக் குறிப்பு (ஆமோஸ் 7:10-17) ஆகியவற்றையும் காணவும். [4]கள்ளத் தீர்க்கதரிசிகளின் இரு வகைகளைப் பற்றியும் உபாகமம் 18:20ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 1 இராஜாக்கள் 18ம் அதிகாரத்தில் வரும் பாலாமின், தீர்க்கதரிசி ஒருவகையான கள்ளத் தீர்க்கதரிசியாக இருந்தார்; 1 இராஜாக்கள் 22ம் அதிகாரத்தில், மிகாயாவை எதிர்த்துப்பேசிய தீர்க்கதரிசி இன்னொரு வகையைக் குறித்து நின்றார், இவ்விருவருமே கர்த்தரின் நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைப்பதாக உரிமை கோரியதால், இவ்விருவருமே கள்ளத் தீர்க்கதரிசிகளாக இருந்தனர் (காண்க 1 இராஜாக்கள் 22:11). [5]David Alexander and Pat Alexander, eds., *Eerdmans' Handbook to the Bible* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 372-73. [6]சில தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் குறிப்பாக மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளன அல்லது குறிப்புரைக்கப் பட்டுள்ளன. (காண்க ஏசாயா 7:14 [மத்தேயு 1:23 உடன் ஒப்பிடவும்]; மல்கியா 4:5 [மத்தேயு 11:14ஐ ஒப்பிடவும்]; மீகா 5:2 [மத்தேயு 2:6ஐ ஒப்பிடவும்].) [7]இந்தத் தேதிகள் பல ஆதாரமூலங்களில் இருந்து எடுக்கப்பட்டன மற்றும் இவைகள் தோராயமானவைகள் என்ற வகையிலேயே நோக்கப்பட வேண்டும். [8]யோவேல் எப்போது தீர்க்கதரிசனம் உரைத்தார் என்பது பற்றிக் கல்வியாளர்கள் மத்தியில் கருத்து ஒருமைப்பாடு இல்லை. [9]ஒபதியா எப்போது தீர்க்கதரிசனம் உரைத்தார் என்பது பற்றிக் கல்வியாளர்கள் மத்தியில் கருத்து ஒருமைப்பாடு இல்லை. [10]தானியேலின் தீர்க்கதரிசனப் புத்தகமும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன, இவை இரண்டும் "இறைவெளிப்பாட்டு" இலக்கியங்களாக உள்ளன. இவைகள் ஒரேமாதிரியான உருவகங்களைக் கொண்டுள்ளன.

[11]இந்த ஆலோசனகள், எழுத்தாளரின் கண்ணோட்டக் கருத்து மற்றும் பின்வரும் ஆதாரமூலங்களில் இருந்து பெற்ற தகவல்கள் ஆகியவற்றின் இணைவாக உள்ளன: John T. Willis, *My Servants the Prophets,* vol. 1 (Abilene, Tex.: Biblical Research Press, 1971), 23-24; Jack P. Lewis, *The Minor Prophets* (Grand Rapids, Mich.: Baker Book House, 1966), 8-9; Samuel Schultz, "Interpreting the Prophets," in *The Literature and Meaning of Scripture,* ed. Morris Inch and C. Hassell Bullock (Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 103-10. [12]ஃபீ மற்றும் ஸ்டுவார்ட் ஆகியோர், தீர்க்கதரிசிகளை "உடன்படிக்கையை அமல்படுத்தும் மத்தியஸ்தர்கள்" என்று விவரித்தனர், தீர்க்கதரிசிகள் "தங்கள் சொந்தத்தில்அல்லாத ஆனால் தேவனுடையதாக இருந்த" செய்தியை எடுத்துரைத்தனர். அவர்களின்

செய்தியானது, அவர்கள் "மோசேயின் தோற்றகால உடன்படிக்கையினுடைய எச்சரிக்கைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றில், தங்கள் தலைமுறைக்கு அத்தியாவசியமாக இருந்த பாடப்பொருளை முன்வைத்தல்" என்ற வகையிலும் அவர்களின் செய்தி "அவர்களிடம் தோன்றாததாக" இருந்தது (Gordon D. Fee and Douglas Stuart, *How to Read the Bible for All Its Worth* [Grand Rapids, Mich.: Zondervan, 2003], 184-87). [13]கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் வேதவசனங்களினால் அங்கீகரிக்கப் பட்டிருப்பதில்லை என்றிருக்கையில், இந்த வசனப்பகுதி அந்தக் கருத்தை நிரூபிப்பதில்லை. [14]Fee and Stuart, 194-97. [15]Lewis, 8-9. [16]Hal Lindsey, *The Late Great Planet Earth* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1970), 171.